முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.10.2022, திங்கட்கிழமை

1. வரம்பல தந்து உலகினில்
வள்ளலாய் வாழும் ஞானியே
அறம் எனும் சக்தி கூட்டியே
அகிலம் காத்திடும் மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தரணியில் உன் பெருமை கூறி
அவனியில் சுபகிருது தரிவை திங்கள்
அறிவிக்க மூவேழீர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 23 ம் நாள் 10.10.2022, திங்கட்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதன்னை
வழங்குவேன் கணநாதர் யானும்
சோரமிலா ஞானவான்கள் படை
செகமெல்லாம் பெருகி வளர
4. வளரவே கலியுகம் தானும்
வந்தடையும் ஞானயுக மாற்றம் ஆக
தளரவிடா கலியுக மக்களை
தவராஜன் ஆசியதும் தேற்றும்
5. தேற்றும் மாதவசியர்களாக
தேற்றும் ஞானவான்படைகளாக
ஆற்றல் பெருகி மக்களுக்கு
அரங்கனால் அற்புதம் நிகழும்
6. நிகழவே நடப்புக் காலமதில்
நீதிமான்களை படைக்கும் வண்ணம்
மகான்கள் சன்மார்க்கம் அருளிவர
மக்களெல்லாம் ஏற்று வந்திட
7. வந்திட மக்களிடை தெளிவும்
வள்ளல் தன்மை பெருகியே
கந்த வேலன் வழிபாட்டின் அவசியம்
கட்டாயமாகி மக்களிடை மாற்றம்
8. மாற்றம் நித்ய பூசையாக
மண்ணை மக்களை காக்கும்
ஆற்றலாகப் பெருகி உலகில்
அற்புதம் சடுதி காண்கும்
9. காண்கவே அன்னதான சேவை
கடைத்தேற்றம் தரும் உயர்
சன்மார்க்க வழிகளாக
செகமெங்கிலும் பரவி மாற்றம்

10. மாற்றம் அரங்கன் அவதாரம்
மண்ணுலகை மீட்டருளும்
தேற்றமிக்க ஞான ஆட்சியாக
தெரிவிப்பேன் ஞானத் தலைமை

11. தலைமை நிறைந்த ஆட்சி
தவராஜன் வழிகாட்டலில்
உலகமெங்கும் அமையும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–